**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 04.07.2025**
**OS. No. 36/2018**
**வழக்கு சாட்சி PW.3–மணி, த/பெ. பெரியசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வாதி குழந்தைசாமி அழைத்ததன் பேரில் வந்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ச.எண்.360/1C ஆனது தன்னுடைய சொத்து என்று விளம்புகை செய்யக்கோரி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வேறு ஏதேனும் பாரிகாரம் கேட்டுள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. ச.எண்.360/1C ஐ மட்டும்தான் வழக்கு சொத்தாக காண்பித்துள்ளார். வேறு என்ன சொத்துக்கள் காண்பித்துள்ளார் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை.

2) பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் என்ன எதிர்வழக்காடுகிறார்கள் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கும், என் வீட்டிற்கும் சுமார் 1/2 கி.மீட்டர் தொலைவு இருக்கும். வாதி எனக்கு அண்ணன் முறை ஆகும். பிரதிவாதி எனக்கு மாமன் முறை ஆகும். வாதி குழந்தைசாமிக்கும், 1ம் பிரதிவாதி குப்பண்ணனும் அண்ணன், தம்பி ஆவார்கள். 26.02.2003 ல் தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. பத்திர அலுவலகத்திற்கு நான் உடன் சென்றேனா என்றால் இல்லை.

3) அந்த பத்திர பதிவு எண் தெரியுமா என்றால் 486/2003 ஆகும். அதை நான் படித்து பார்த்தேன். அந்த பத்திரம் எவ்வளவு தொகைக்கு எழுதப்பட்டது என்றால் தெரியவில்லை, பதிவு செய்தது மட்டும் படித்து பார்த்தேன். பத்திரத்தில் எவ்வளவு

சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் படித்து பார்க்கவில்லை. அந்த பத்திரத்தை யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி இருவருக்கும் இடையே எழுதி கொண்டார்கள். அந்த ஆவணப்படி எந்த சொத்து யாருக்கு பாத்தியமாக பிரிக்கப்பட்டது என்றால் வாதிக்கு ச.எண்.360/1C சொத்து வழங்கப்பட்டது, 1ம் பிரதிவாதிக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்று நான் அந்த பத்திரத்தில் பார்க்கவில்லை.

4) அந்த தேதியில் எத்தனை பத்திரங்கள் எழுதி கொண்டார்கள் என்றால் ஒரு பத்திரம் தான் என்னிடம் காண்பித்தார்கள், அதை பார்த்தவுடன் நான் திருப்பி கொடுத்துவிட்டேன். அந்த பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்று வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் குழந்தைசாமி பெயரில் உள்ளது. அதன் பட்டா எண்.780 ஆகும். பட்டா எண் மட்டும் தான் நான் பார்த்தேன். அது எவ்வளவு நிலம் என்று நான் பார்க்கவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 21.07.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.